**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110300

1. District மாவட்டம் : Karur    PS: காவல்நிலையம்: V & AC, Karur    Year: ஆண்டு: 2021    FIR No.: மு.த.அ. எண்: 6/AC/21    Date: நாள்: 13/08/21

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 as amended in 2018    Sections பிரிவுகள்: 7, 7 r/w 12
   (ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் 12.08.21    Date to : நாள் வரை 13.08.21
   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல் 20.30 hrs    Time to : நேரம் வரை 02.00 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.08.21    Time நேரம் : 10.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 13.08.21    Time நேரம் : 10.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : ~~எழுத்து~~ மூலம் / ~~வாய்~~ மொழியாக    சுயமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 20 Km தென்கிழக்கு & சுமார் 08 Km தென்கிழக்கு and
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி ரெங்கபாளையம் to உப்பிடமங்கலம் செல்லும் சாலை & மாவட்ட பதிவாளர் நிர்வாகம், அலுவலகம், கரூர்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. நடராஜன்    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முத்துச்சாமி
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு வயது 48    (d) Nationality நாட்டினம் இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —    Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் காவல் துணை கண்காணிப்பாளர்    (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கரூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு. Y. பாஸ்கரன், [56/2021], த/பெ. ஜோசப், மாவட்ட பதிவாளர் [நிர்வாகம்] மாவட்ட பதிவாளர் அலுவலகம், மாவட்ட ஆட்சியரக வளாகம், கரூர்.
   2) திரு. P. சந்திரசேகரன், [48/2021], த/பெ. பழனிச்சாமி, எண்-60, சாவித்திரி நகர், திண்டுக்கல்.

8. Reasons for delay ~~in~~ reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   — தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

- Vide Form - 91 -

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு Rs. 48,000/-

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக குற்ற எண் :- 6/AC/21 u/s 7, 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன் தொடர்ச்சி இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு ~~எடுத்துக்கொள்ளப்பட்டது~~ / பணிக்கப்படுதல் திரு. K. சாமிநாதன்.......... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு காவல் ஆய்வாளர், காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது கரூர்.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Suo-motto FIR

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 13/8/21
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[M. நடராஜன்]
Name: பெயர் ....................
Rank: நிலை ....................
காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கரூர்
[13.08.2021]

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 13/08/21 @ 12.30 hrs.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

**Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.6/AC/2021 u/s 7, 7 r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018.**

சமர்ப்பிக்கப்படுகிறது :

கரூர் மாவட்டம், கரூர் மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) ஆக பணிபுரியும் திரு.பாஸ்கரன் என்பவர் அவருடைய பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இந்திய முத்திரைத்தாள் சட்டம் பிரிவு 47A(1) பத்திரங்களை பதிவு செய்யும்போது (3) நடவடிக்கை செய்து பத்திரங்களை பதிவு செய்ய சார் பதிவாளருக்கு வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கவும், புதிய மனைப்பிரிவுகள் உருவாக்கப்படும்போது அந்த இடத்தில் நடவடிக்கை செய்து விலைமதிப்பு நிர்ணயம் செய்து உத்தரவிடவும் மற்றும் இதர அலுவல்களை செய்ய நடவடிக்கைக்கு செல்லும்போது லஞ்சமாக பணம் பெற்று வருவதாகவும், அதை அவர் நேரடியாகவும், தனியாக வேலைக்கு வைத்துக்கொண்ட டிரைவர் திரு.சந்திரசேகரன் என்பவர் உதவியுடன் பெற்று வைத்து, அதை அவர் பயன்படுத்திவரும் TN 46 H 2444 என்ற மாருதி ஆல்டோ காரில் மறைவில் எடுத்துக்கொண்டு திண்டுக்கல்லில் உள்ள அவரது வீட்டிற்கு செல்வதாகவும் நம்பத்தகுந்த தகவல் முன்தகவலாளர்கள் மூலம் கிடைத்தது.

அதன் பேரில், வழக்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையாக முன்அனுமதி பெற்று 12.08.2021 ந்தேதி இரவு சுமார் 8.30 மணிக்கு நான், சாட்சிகள் (1)முனைவர் ச.செல்வகுமார் (41/2021), உதவி பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி, தான்தோன்றிமலை, கரூர், (2)திரு.க.பிரபாகரன் (33/2021), இளநிலை பொறியாளர், இளநிலைபொறியாளர் அலுவலகம், மகிளிப்பட்டி பிரிவு, தமிழ்நாடு மின்சார வாரியம், கரூர் ஆகியோர் முன்னிலையில் காவல் குழுவினருடன் திடீர் சோதனை செய்ய புறப்பட்டு கரூர் உப்பிடமங்கலத்திலிருந்து வெங்கம்பாளையத்திற்கு செல்லும் பாதையில் வந்தேன். அப்போது TN46 H 2444 என்ற மாருதி ஆல்டோ காரில் மாவட்ட பதிவாளர் திரு.பாஸ்கரன் அவர்களை பின் இருக்கையில் அமரவைத்துக்கொண்டு, மேற்படி காரை திரு.சந்திரசேகரன் வெங்கம்பாளையத்திலிருந்து உப்பிடமங்கலத்தை நோக்கி ஓட்டிவந்தார்.

மேற்படி காரை அந்த ரோட்டில் எரிந்து கொண்டிருந்த ஒரு தெரு விளக்கின் அடியில் நின்று நிறுத்தச் சொல்லி மாவட்ட பதிவாளரையும், அவரது டிரைவர் திரு.சந்திரசேகரனையும் வண்டியிலிருந்து இறங்கச் செய்தேன். அவர்களை தனித்தனியாக விசாரிக்கப்பட்டது. அப்போது மாவட்ட பதிவாளர் திரு.பாஸ்கரன் அவர்கள் அணிந்திருந்த பேண்ட்டின் இடதுபக்க சைடு பாக்கெட்டிலிருந்து கருப்பு நிற மணிபர்ஸ் ஒன்றை எடுத்து ஆஜர் செய்தார். அதில் அவருடைய அடையாள அட்டை இருந்தது. அத்துடன் ரூ.760/ பணமும் இருந்தது. அதைப்பற்றி அவரிடம் விசாரித்து, அவரது சொந்தபணம் என்றும், கைச்செலவிற்கு வைத்திருப்பதாகவும் தெரியவந்ததால், மேற்படி தொகை மற்றும் அடையாள அட்டையுடன் கூடிய மணிபர்சை அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவர் வசம் காணப்பட்ட சாம்சங்

மொபைல்போன் அதாவது அவரது சொந்த எண்.9443746156 மற்றும் அலுவலக சியுஜி எண்.8300820060 என்ற மொபைல் எண்களுக்குரியதை விசாரணைக்கு பிறகு அவர் வசமே ஒப்படைக்கப்பட்டது.

மேலும் அவரை விசாரித்தபோது, மேற்படி காரில் அவர் அமர்ந்திருந்த பின்இருக்கையில் வைக்கப்பட்டிருந்த கருப்புநிற மதிய உணவு டிபன் பாக்ஸ் எடுத்துச்செல்லும் பையிலிருந்து ஒரு சிறிய வெள்ளைக்கலர் கவர், ஒரு சிறிய காக்கி கலர் கவர், ஒரு பெரிய காக்கி கலர் கவர் ஆகியவற்றை எடுத்து மாவட்ட பதிவாளர் திரு.பாஸ்கரன் ஆஜர் செய்தார். அதில் சிறிய வெள்ளைக்கலர் கவரின் ஒருமுனை கிழிக்கப்பட்டிருந்தது. அதில் ஒருபுறம் அனுப்புகை எழுத்தர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், நீதிமன்ற வளாகம், கண்டோன்மெண்ட், திருச்சிராப்பள்ளி-4 என்ற நீலநிற சீலும், அதற்குமேலே ஒரு கருப்புநிற சுருக்கொப்பமும், வலதுபுறம் இந்திய அரசுப்பணிக்கு மட்டும் என்ற நீலநிற சீலும், பெறுநர் சார் பதிவாளர், சார் பதிவாளர் அலு, நங்கவரம் என்ற கருப்புநிற எழுத்துக்களும் காணப்பட்டது. அதனுள்ளே பத்து 500 ரூபாய் நோட்டுக்கள் அடங்கிய மொத்தம் ரூ.5000/- இருந்தது. அதைப்பற்றி அவரிடம் விசாரித்தபோது, நங்கவரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் தனக்கு இன்று அன்பளிப்பாக கொடுத்தது என்று தெரிவித்தார்.

சிறிய காக்கி கவரின் உள்ளே இருந்த தொகையை பிரித்து எடுத்து பார்த்தபோது, பத்து 500 ரூபாய் நோட்டுக்கள் அடங்கிய மொத்தம் ரூ.5000/- இருந்தது. தொடர்ந்து அத்துடன் இருந்த ஒரு பெரிய காக்கி கவரை பிரித்து எடுத்து பார்த்தபோது, இருபது 500 ரூபாய் நோட்டுக்கள் அடங்கிய மொத்தம் ரூ.10,000/- இருந்தது. அவைகளைப்பற்றி அவரிடம் விசாரித்தபோது, குளித்தலை மற்றும் கிருஷ்ணராயபுரம் சார் பதிவாளர் அலுவலகங்களில் தனக்கு அன்பளிப்பாக இன்று கொடுத்த கவர்கள் 2 உள்ளது, யார் எதை கொடுத்தார்கள் என்று சரியாக நினைவில்லை என்று சொன்னார்.

மேலும், அவர் அன்று மதிப்பு நிர்ணயம் சம்பந்தமாக 2 இடத்திற்கும், பிரிவு 47A(i) சம்மந்தமாக ஒரு இடத்திற்கும் புலதணிக்கைக்காக சென்று வந்ததாகவும், தரகம்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சர்ப்ரைஸ் விசிட் சென்றுவந்ததாகவும் தெரிவித்தார். மதிப்பு நிர்ணயம் மற்றும் 47A(i) சம்பந்தமாக சென்று வந்த இடங்களில் மதிப்பு நிர்ணயம் சம்மந்தமாக குளித்தலை பகுதியில் மட்டும் திரு.சித்தார்த்தன் அன்பளிப்பாக கொடுத்த பணத்தை டிரைவர் சந்திரசேகரனிடம் கவருடன் கொடுத்ததாகவும், மேலும் குளித்தலை சார் பதிவகத்தில் பெட்ரோல் செலவிற்கு வெள்ளைப்பேப்பரில் வைத்து மடித்து கொடுத்த ரூ.3000/- பணமும் டிரைவர் சந்திரசேகரனிடம் இருப்பதாக தெரிவித்தார்.

எனவே, இதனைத் தொடர்ந்து டிரைவர் சந்திரசேகரனை விசாரித்தபோது, அவர் வசம் பேண்ட் பின் பாக்கெட்டில் இருந்த பிரௌன் கலர் மணி பர்சில், ரூ.680 இருந்ததை எடுத்து

13/8/21

ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்று சொன்னதால் பணத்துடன் மணிப்பர்சை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் அவர் வசம் காணப்பட்ட சாம்சங் மொபைல்போன் 9790506063 எண்ணுக்குரியதை அவர் சொந்த கைபேசி என்று கூறியதால் அவர் வசமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரை விசாரித்தபோது, அவர் அவருடைய இடதுபக்க பேண்ட் பாக்கெட்டில், மாவட்ட பதிவாளர் உத்தரவுப்படி வாங்கி வெள்ளைத்தாளில் மடித்து வைத்திருந்த பணத்தை ஆஜர் செய்தார். அதில் 500 ரூபாய் நோட்டுக்களாக மொத்தம் ரூ.3000/- இருந்தது. அந்த வெள்ளைத்தாளில் ”பொதுமக்கள் நலன் சார்ந்த சுற்றறிக்கைகள்/அரசாணைகள் பதிவுத்துறையின் இணையதளத்தில் பார்வையிடும் வசதி” என்ற வாசகம் கருப்பு நிறத்தில் அச்சிடப்பட்டிருந்தது. அந்த பணத்தை மாவட்ட பதிவாளர் தன்னிடம் பெட்ரோல் செலவுக்கு வைத்துக் கொள்ளச்சொன்னதாக தெரிவித்தார். மேலும் அவரிடம் அதே பாக்கெட்டில் மாவட்ட பதிவாளர் வாங்கி தற்காலிகமாக வைத்திருக்க கொடுத்ததாக பெரிய காக்கி கவரில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் 3 கத்தைகளாக 500 ரூபாய் தாள்களாக ரூ.5000/-, ரூ.10,000/- மற்றும் ரூ.10,000/- ஆக மொத்தம் ரூ.25,000/- இருந்தது. அந்த கவர் சற்று கசங்கி கிழிந்து இருந்தது. அதனைத் தொடர்ந்து அந்த இடம் நடுசாலையாகவும், குறுகலாகவும், சில வாகன போக்குவரத்துடனும், இரவு நேரமாகவும் இருந்ததால் அங்கு வைத்து திடீர் சோதனை நடவடிக்கைகளை தயாரிக்க வசதியாக இல்லை என தெரிந்தது.

எனவே, மேற்படி வாகனத்துடன் மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு மாவட்ட பதிவாளர் திரு.பாஸ்கரன் மற்றும் அவரது டிரைவர் ஆகியோர்களை சாட்சிகள் மற்றும் பார்ட்டியுடன் அழைத்துக்கொண்டு இரவு சுமார் 9.00 மணிக்கு கரூர் மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) அவர்கள் அலுவலகத்திற்கு அழைத்துவந்து மாவட்ட பதிவாளர் திரு.பாஸ்கரன் அவர்களது அறையில் வைத்து மேற்படி நிகழ்வுகள் சம்மந்தமாக நடவடிக்கைகள் ஒன்று தயார் செய்ய ஆரம்பித்தேன். அப்போது திரு.பாஸ்கரன் அவர்கள் வசம் 3 கவர்களில் மேலே சொன்னவாறு அன்பளிப்பாக பெறப்பட்டதாக சொன்ன தொகைகள் மொத்தம் ரூ.20,000/- மற்றும் அவரது டிரைவர் திரு.சந்திரசேகரன் அவர்கள் வசம் மேலே சொன்னவாறு அதாவது மாவட்ட பதிவாளர் திரு.பாஸ்கரன் அவர்களின் உத்தரவுப்படி பெட்ரோல் செலவுக்கென வாங்கி வைத்திருந்த ரூ.3000/- மற்றும் பெரிய காக்கி கவரில் வாங்கி வைத்திருந்த ரூ.25,000/- ஆக மொத்தம் ரூ.28,000/-த்தை விசாரணைக்காக கவர்களுடனும், வெள்ளைத்தாளுடனும் கைப்பற்றினேன்.

இந்த திடீர் சோதனை நடவடிக்கையின்போது, திரு.பாஸ்கரன், மாவட்ட பதிவாளர் அவர்கள் அலுவலக அறையை சோதனை செய்தபோது எந்த தொகையும் காணப்படவில்லை. மேலும் திரு.பாஸ்கரன் அவர்கள் 12.08.2021 அன்று தரகம்பட்டி சார் பதிவாளர் அலுவலகத்தை

13/8/21

காலை 10.20 மணிக்கு சர்ப்ரைஸ் விசிட் செய்து அவர் கைப்பட பச்சை மையினால் எழுதிய குறிப்புத்தாள் ஒன்று, மதிப்பு நிர்ணயம் சம்பந்தமாக ராஜேந்திரம் வடக்கு கிராமத்தில் புல எண்.325/2சி2 குளித்தலை சார் பதிவகத்திற்குட்பட்டதை புல தணிக்கை செய்து அவர் கைப்பட எழுதிய குறிப்புத்தாள் ஒன்று (திரு.மு.சித்தார்த்தன் என்பவரின் கையொப்பத்துடன் கூடியது), 47A(i) சம்மந்தமாக நங்கவரம் சார் பதிவக எல்லைக்குட்பட்ட ரூ.7,26,000/- மதிப்புடைய சுத்தகிரைய சாசன பத்திர வரைவு (12 தாள்கள் அடங்கியது) மற்றும் அதற்கான அவர் கைப்பட எழுதிய குறிப்புத்தாள் ஒன்று, மதிப்பு நிர்ணயம் சம்மந்தமாக மேலப்பாளையம் கிழக்கு கிராமத்தில் புல எண்.802/3ஏ, 3பி, 803/ஏ5 ஜாயிண்ட்-1 சார் பதிவகத்திற்குட்பட்டதை புல தணிக்கை செய்து அவர் கைப்பட எழுதிய குறிப்புத்தாள் ஒன்று (12.08.2021 தேதியிட்ட ஒரு கையொப்பத்துடன் கூடியது) ஆக மொத்தம் பக்கம் 1 முதல் 32 வரை இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி கோப்பு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேலும் இந்த நடவடிக்கையின்போது மாவட்ட பதிவாளர் திரு.பாஸ்கரன் அவர்கள் அவரது இருக்கையிலிருந்து ஆஜர் செய்த 47A(i) REGISTER பக்கம் 1 முதல் 154 வரை இருந்ததை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.பாஸ்கரன் அவர்கள் ஆஜர் செய்த கரூர் மாவட்ட பதிவாளர் அலுவலக மதிப்பு நிர்ணய கோப்பு 2939, நாள்.11.08.2021 அதாவது குளித்தலை சார் பதிவாளர் அலுவலக கடித எண்.133/21, நாள்.06.08.2021 உடன் அடங்கிய பக்கம் 1 முதல் 150 வரை இருந்த கோப்பு அதாவது திரு.மு.சித்தார்த்தன் என்பவர் இடம் சம்மந்தப்பட்டதை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

திரு.பாஸ்கரன் அவர்கள் விசாரணையின்போது, தனக்கும் இந்த கவரில் காணப்படும் பணம் கொடுத்த நபர்களுக்கும் எந்த கொடுக்கலும், வாங்கலும் கிடையாது என்றும், எல்லாமே தான் செய்த அரசு வேலைகளுக்கு அன்பளிப்பாக கொடுத்தது என்றும் தெரிவித்தார். மேலும் தன்னிடம் படைவீரர் கொடிநாள் நிதி இலக்கோ அல்லது சிறுசேமிப்பு இலக்கோ நிலுவையில் இல்லை என்றும் தெரிவித்தார். இதுகுறித்து திரு.பாஸ்கரன் மாவட்ட பதிவாளர் மற்றும் திரு.சந்திரசேகரன் தனிநபர்/மாவட்ட பதிவாளரின் டிரைவர் இருவரிடமும் தனித்தனியாக வாக்குமூலங்கள் சாட்சிகள் முன்னிலையில் கையொப்பத்துடன் பதிவு செய்யப்பட்டது.

கரூர் மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) திரு.பாஸ்கரன் அவர்களின் மேற்படி செயல்களானது u/s 7 of PC Act, 1988 as amended in 2018-ன்படி வழக்கு பதிவு செய்ய போதிய முகாந்திரம் உள்ள செயல்களாகும். இதேபோல், மாவட்ட பதிவாளர் திரு.பாஸ்கரன் அவர்கள் பயன்படுத்திய TN 46 H 2444 என்ற மாருதி ஆல்டோ காரில் வாகனத்திற்கு ஓட்டுனராக செயல்பட்ட திரு.சந்திரசேகரன் என்பவரது மேற்படி செயல்களானது u/s 7 r/w 12

13/8/21

of PC Act, 1988 as amended in 2018-ன்படி வழக்கு பதிவு செய்ய போதிய முகாந்திரம் உள்ள செயல்களாகும்.

சோதனை நடவடிக்கைகள் முழுவதும், அரசு விதிமுறைகளின்படி சமூக இடைவெளியை கடைபிடித்தும், அவ்வப்போது கிருமி நாசினி கொண்டு அனைவர் கைகளை சுத்தம் செய்தும், முககவசம் அணிந்தும் மேற்கொள்ளப்பட்டது. திடீர் சோதனை தொடர்பான இதர விபரங்கள் 12.08.2021 தேதி இரவு 9.00 மணி முதல் நள்ளிரவு 2.00 மணிவரை தயார் செய்யப்பட்ட எனது நடவடிக்கைகளில் விரிவாக கூறப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி நிகழ்வுகள் தொடர்பாக புலன் விசாரணை செய்யும் பொருட்டு, Karur V&AC Cr.No.6/AC/2021 u/s 7, 7 r/w 12 of Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி திரு.Y.பாஸ்கரன், த/பெ.யோசப், மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்), மாவட்ட பதிவாளர் அலுவலகம், கரூர் மாவட்ட ஆட்சியரக வளாகம், கரூர் மற்றும் திரு.சந்திரசேகரன், த/பெ.பழனிச்சாமி, கதவு எண்.60, சாஸ்திரி நகர் 3வது தெரு, திண்டுக்கல், பழைய முகவரி :- கதவு எண்.73, சாஸ்திரி நகர், திண்டுக்கல், திண்டுக்கல் மாவட்டம் ஆகியோர்கள்மீது இன்று 13.08.2021ஆம் தேதி காலை 10.30 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக வாய்மொழி அனுமதி பெற்று வழக்கு பதிவு செய்கிறேன்.

இதன் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் திடீர் சோதனை நடவடிக்கைகள் ஆகியவற்றை இணைத்து மேன்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி, கரூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது. இதர நகல்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது.

13/8/21

(எம்.நடராஜன்),
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கரூர்.